**TAMIL NADU POLLUTION CONTROL BOARD**

**MINUTES OF PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED ROUGH STONE AND GRAVEL QUARRY TMT.K.SANGEETHA ROUGH STONE & GRAVEL QUARRY OVER AN EXTENT OF 2.36.5 HECTARES AT S.F.NO.423/2 (P), VADAPUDUR VILLAGE, KINATHUKADAVU TALUK, COIMBATORE DISTRICT ON 01.02.2024 AT 11.00 P.M AT M/S. S.V.MAHAL, OLD CHECK POST, KINATHUKADAVU TALUK, COIMBATORE DISTRICT.**

**Present:**

| | | | |
|---|---|---|---|
| 1 | Tmt.R.Jeeva | : | **Special District Revenue Officer, (Land Acquisition & Management Unit) Coimbatore District** |
| 2 | Dr. R. Chandrasekaran | : | **District Environmental Engineer**, Tamil Nadu Pollution Control Board, Coimbatore South. |
| 3. | Thiru.S.Prabhu | : | **Assistant Engineer,** Tamil Nadu Pollution Control Board, Coimbatore South. |
| 4. | Thiru.A.Vignesh | : | **Assistant Engineer,** Tamil Nadu Pollution Control Board, Coimbatore South. |
| 5. | Tmt.K.Sangeetha | : | Project Proponent Tmt.K.Sangeetha Rough Stone & Gravel Quarry |
| 6. | Thiru.M.Shaik Nawas | : | EIA Consultant M/s. GEO Exploration and Mining Solutions, Salem. |
| 7. | Public | : | 27 Nos. (List enclosed as Annexure) |

*********

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Coimbatore South welcomed the **Special District Revenue Officer (Land Acquisition & Management Unit)** Coimbatore and all general public and project proponents who are attending the public hearing for the Proposed Rough Stone And Gravel Quarry Tmt.K.Sangeetha Rough Stone & Gravel Quarry over an extent of 2.36.5 Hectares at S.F.No.423/2 (P), Vadapudur Village, Kinathukadavu Taluk, Coimbatore District.

It is required to get Environmental Clearance (EC) from the Ministry of Environment, Forest and Climate Change (MoEF &CC), Government of India for certain projects including quarry after conducting Public Hearing. He added that the public notice informing the conducting of Public Hearing was published in **"Thinathanthi"** and **"New India Express"** dated 24.12.2023 and also pointed out the EIA report and Executive summary are made available for public reference at respective Offices and informed that the project consultant on behalf of project proponent would make a presentation on the proposed project, after which the public can express their views.

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Coimbatore South also stated that the views, suggestions and queries of the public and reply by the project consultant will be recorded through videography / Audio and the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu.

Special District Revenue Officer (Land Acquisition & Management Unit) Coimbatore District, has initiated the Public Hearing process and requested the project consultant to explain about their proposed project through power point presentation and requested the public to express their views and raise obtain necessary clarifications for their doubts. Main aim of this meeting is to register the Public views related to Environment.

Thereafter, Thiru.M.Shaik Nawas, EIA Consultant, M/s Geo Exploration and Mining Solutions, Salem, Tamilnadu of the proposed project has made presentation about the project to the public along with Environmental Management Plan.

Thereafter, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Coimbatore South has invited the public to express their views and comments about the proposed Project. The views and suggestions of the public's are detailed below:

**1. Mr. S. Radhakrishnan**

I am Radhakrishnan from Bhagavatipalayam. I have no objection in granting license to this quarry.

**2. Mr. P. Ganesan**

I am Ganesan from Singaianputhur. I have no objection in granting license to this quarry.

**3. Mr. M. Prakash**

I am Prakash from Chikkalampalayam. I have no problem in establishment of this quarry.There is no disturbance due to this quarry.

**4. Mr. G. Senthilkumar**

I am Senthilkumar from Chikkalampalayam. Since, I am working in this quarry I have no problem in giving permission for this quarry.

**5. Mr. S. Srinivasan**

I am Srinivasan from Kinathukadavu. I have no objection for licensing this quarry.

**6. Mr. Karthikeyan**

Greetings, I am Karthikeyan, Zameen Kalathur. I am not a third person to this quarry. I am Mrs. Sangeetha's brother-in-law. I register my objection to grant license to this quarry. I have sent a registered mail to Assistant Director, Chennai, Tamil Nadu Pollution Control Board, SEIAA Chennai to cancel this meeting. I have not received any reply. No Public hearing should be conducted, until my complaint is disposed. I have sent a petition that the meeting should not be held. Despite that, the meeting is being conducted. My wife has come to this meeting. She will also give them a letter stating that she does not agree to grant the license. I want you to accept it.

**7. Mr. Su. Kathirvel**

I am the 11th Ward Councilor and Chairman of Kinathukadavu Town Panchayat. I belong to Bhagavatipalayam. I have no objection in grant of license at present. I request you to allow the functioning of this quarry with certain terms and conditions.

**8.Mr.Mohana Krishnan**

I am Mohana Krishnan. From Singhayanputur belongs to Vadaputur panchayat. If quarry is in operation, it will be useful for 5 years. 200-250 families depend on this.

**Vote of Thanks**

Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Coimbatore South requested AE to deliver vote of thanks. Thiru.S.Prabhu,AE thanked Public, Environmentalists, NGOs and District Administration for convening the meeting peacefully. DEE also informed that the views, suggestions, written complaints and queries of the public and reply by the project consultant are recorded through videography / Audio and the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamil Nadu - Chennai.

Number of Petitions received - 1

List of participants attended the public hearing meeting along with photographs and CD recorded with the entire proceedings of public hearing are enclosed herewith.

**District Environmental Engineer**
**Tamil Nadu Pollution Control Board**
**Coimbatore South**

**Special District Revenue Officer**
**(LA & M)**
**Coimbatore District**

## தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்

கோயம்புத்தூர் மாவட்டம், கிணத்துக்கடவு வட்டம், வடபுதூர் கிராமம், க.ச.எண்.423/2(P)ல் 2.36.5 ஹெக்டெர்ஸ் பரப்பில் உத்தேசிக்கப்பட்டுள்ள திருமதி.K.சங்கீதா ரஃப் ஸ்டோன் & கிராவல் குவாரி திட்டத்திற்கு கோயமுத்தூர் மாவட்டம், கிணத்துக்கடவு வட்டம், பழைய செக் போஸ்ட் அருகில் அமைந்துள்ள தி/ள்.S.V. மஹாலில் 01.02.2024 அன்று காலை 11.00 மணி அளவில் நடைபெற்ற பொது மக்கள் கருத்துக் கேட்புக் கூட்ட நடவடிக்கை குறிப்புகள்.

**பங்கேற்றோர்:**

| | | | |
|---|---|---|---|
| 1 | திருமதி.இரா.ஜீவா, | : | தனி மாவட்ட வருவாய் அலுவலர்,<br>நிலஎடுப்பு மற்றும் மேலாண்மை அலகு<br>கோயம்புத்தூர் மாவட்டம். |
| 2 | Dr. R. சந்திரசேகரன் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் ,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>கோயம்புத்தூர் தெற்கு |
| 3. | திரு. S.பிரபு | : | உதவி பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கோயம்புத்தூர் தெற்கு |
| 4. | திருமதி. A.விக்னேஷ் | : | உதவி பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கோயம்புத்தூர் தெற்கு |
| 5. | திருமதி.K.சங்கீதா | : | உரிமையாளர்<br>திருமதி.K.சங்கீதா ரஃப் ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரி |
| 6. | திரு. M. ஷேக் நவாஸ் | : | திட்ட ஆலோசகர்,<br>ஜியோ எக்ஸ்புரேசன் அண்டு மைனிங் சொல்யுசன்ஸ், சேலம், தமிழ்நாடு. |
| 7. | பொதுமக்கள் | : | 27 எண்ணிக்கை |

கோயம்புத்தூர் மாவட்டம், கிணத்துக்கடவு வட்டம், வடபுதூர் கிராமம், க.ச.எண்.423/2(P)ல் 2.36.5 ஹெக்டெர்ஸ் பரப்பில் உத்தேசிக்கப்பட்டுள்ள திருமதி.K.சங்கீதா ரஃப் ஸ்டோன் & கிராவல் குவாரி திட்டத்திற்கு மத்திய சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை தனி மாவட்ட வருவாய் அலுவலர் (நிலஎடுப்பு மற்றும் மேலாண்மை அலகு) அவர்களையும், பொது மக்களையும் மற்றும் ரஃப் ஸ்டோன் மற்றும் கிரேவல் குவாரி உரிமையாளர் அவர்களையும், கோவை மாவட்டம், கோயமுத்தூர் தெற்கு அலுவலக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் வரவேற்றார். மத்திய சுற்றுச்சூழல் வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகத்தின் 2006–ஆண்டு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கையின்படி 8 வகையான தொழிற்சாலைகளுக்கு சுற்றுச்சூழல் முன் அனுமதி பெற வேண்டும் என்பது அவசியம் என்றும், அவ்வாறு சுற்றுச்சூழல் முன் அனுமதி பெறும் போது பொதுமக்களின் கருத்துக்களை கேட்டு அதை பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு

ஆணையத்திற்கும் மற்றும் மத்திய சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கும் சமர்ப்பிக்க வேண்டுமென்பது விதியாகும். அதன்படி இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் விவரம் ஏற்கனவே தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களான முறையே "தினத்தந்தி" மற்றும் "தி நியூ இந்தியா எக்ஸ்பிரஸ்" ஆகிய நாளிதழ்களில் 24.12.2023 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததையும் மற்றும் தேவையான அலுவலகங்களில் பொதுமக்கள் பார்வைக்காக சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை மற்றும் திட்ட சுருக்கம் வைக்கப்பட்டிருந்ததாக சுட்டிக்காட்டினார். மேலும், இத்திட்டம் தொடர்பாக குவாரி உரிமையாளர்களின் சார்பாக அவருடைய திட்ட ஆலோசகர் ரஃப்ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரி திட்டத்தை பற்றிய உரையை பொதுமக்களுக்கு விளக்குவார் எனவும், அதனை தொடர்ந்து பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பான கருத்துக்கள், ஆலோசனைகள், சந்தேகங்கள், விளக்கங்களை கேட்கலாம் எனவும், இவையனைத்தும் ஒலி மற்றும் ஒளிப்பதிவு செய்யப்பட்டு இக்கூட்டத்தின் நடவடிக்கைகள் மற்றும் குறிப்புகள் மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம் / தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என தெரிவித்தார்.

தனி மாவட்ட வருவாய் அலுவலர் (நிலஎடுப்பு மற்றும் மேலாண்மை அலகு) அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை தொடங்கி வைத்தார். அவர் பொதுமக்கள் எடுத்துரைக்கும் சுற்றுச்சூழல் சம்மந்தமான கருத்துக்களை பதிவு செய்வது இக்கூட்டத்தின் நோக்கம் என்று கூறினார். பின்னர் ரஃப் ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரி திட்டத்தின் திட்ட ஆலோசகரால் உத்தேசிக்கப்பட்டுள்ள ரஃப் ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரிகள் தொடர்பான விளக்கவுரையை நிகழ்த்தக் கூறினார்.

அதனை தொடர்ந்து ரஃப்ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் திரு. M. ஷேக் நவாஸ், ஜியோ எக்ஸ்புரேசன் அண்டு மைனிங் சொல்யுசண்ஸ், சேலம், தமிழ்நாடு அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்தோர் அனைவரையும் வரவேற்று உத்தேசிக்கப்பட்டுள்ள ரஃப்ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரி திட்ட செயல்பாடு தொடர்பாகவும் மற்றும் இதன் செயல்பாட்டின் போது மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் காணொளி விளக்கக்காட்சி மூலம் விரிவாக எடுத்துரைத்தார்.

பின்னர் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கோயம்புத்தூர் தெற்கு அவர்கள் தற்போது காணொளி விளக்கக்காட்சி மூலம் விரிவாக எடுத்துரைக்கப்பட்ட இந்த ரஃப் ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரி திட்டம் குறித்த பொதுமக்களின் கருத்துக்களை பதிவு செய்யலாம் எனவும் அவை வீடியோவிலும் பதிவு செய்யப்படும் எனவும் கூறினார்.

அதன்படி, பொதுமக்கள் தங்களுடைய கீழ்க்கண்ட கருத்துக்களை பதிவு செய்தனர், ஆலோசனைகளை தெரிவித்தனர்.

**பொது மக்கள் கருத்துக்கள;**

**1. திரு. S. ராதாகிருஷ்ணன்**

என் பெயர் இராதாகிருஷ்ணன். நான் பகவதிபாளையத்திலிருந்து வருகிறேன். இந்த கல்குவாரிக்கு லைசன்ஸ் கொடுப்பதில் எனக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை.

**2. திரு. P. கணேசன்**

என் பெயர் கணேசன் எங்கள் ஊர் சிங்கையன்புதூர். இந்த கல்குவாரிக்கு லைசன்ஸ் கொடுப்பதில் எனக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை.

**3. திரு. M. பிரகாஷ்**

என் பெயர் பிரகாஷ், சிக்கலாம்பாளையம். இந்த குவாரி வருவதால் எந்த இடையூறும் இல்லை.

**4. திரு. G. செந்தில்குமார்**

என் பெயர் செந்தில்குமார், சிக்கலாம்பாளையம். இந்த கல்குவாரி வருவதால் எந்த பிரச்சனையும் இல்லை. நான் அங்குதான் வேலை செய்கிறேன்.

**5. திரு. சு. ஸ்ரீனிவாசன்**

என் பெயர் ஸ்ரீனிவாசன். நான் கிணத்துக்கடவை சேர்ந்தவன். இந்த கல்குவாரிக்கு லைசன்ஸ் கொடுப்பதில் எனக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை.

**6. திரு. கார்த்திகேயன்**

என் பெயர் கார்த்திகேயன், ஜமீன் களத்தூர். நான் இந்த கல்குவாரிக்கு மூன்றாம் நபர் கிடையாது. திருமதி. சங்கீதாவின் உடன் பிறந்த சகோதரியின் கணவர். என்னுடைய கருத்து, இந்த கல்குவாரிக்கு லைசன்ஸ் கொடுப்பதற்கு அப்ஜக்ஷன் தெரிவிக்கிறேன். இக்கூட்டம் நடக்கக் கூடாது என Assistant Director, Chennai, தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம், சென்னை SEIAA எல்லோருக்கும் பதிவு தபால் அனுப்பியுள்ளேன். இதுவரை எந்தவித பதிலும் இல்லை. என்னுடைய புகார் நிலுவையில் இருக்கும் பொழுது கருத்துக் கேட்பு கூட்டம் நடத்த கூடாது. கூட்டம் நடத்தக் கூடாது என்றுதான் மனு கொடுத்தேன். அதையும் மீறி கூட்டம் நடக்கிறது. இந்தக் கூட்டத்தில் என்னுடைய மனைவி வந்துள்ளார். அவர், லைசன்ஸ் கொடுப்பதில் உடன்பாடு இல்லை என்கிற கடிதமும் தங்களிடம் கொடுப்பார். அதை ஏற்க வேண்டுகிறேன்.

**7. திரு. சு.கதிர்வேல்**

நான் 11 ஆவது வார்டு கவுன்சிலர் மற்றும் கிணத்துக்கடவு பேரூராட்சி தலைவர். நான் பகவதிபாளையத்தைச் சேர்ந்தவர். தற்போது லைசென்ஸ் கொடுப்பதில் ஆட்சேபனை இல்லை. பின் நாட்களில் பாதுகாப்போடும், விதிமுறைகளோடும் அனுமதிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

8. திரு. மோகன கிருஷ்ணன்

நான் மோகன கிருஷ்ணன். சிங்கையன்புதூர், வடபுதூர் பஞ்சாயத்தைச் சார்ந்தவர். எங்களுக்கு இந்த குவாரி வருவதால் 5 வருடத்திற்கு பயனுள்ளதாக இருக்கும். 200– 250 குடும்பங்கள் இதை நம்பித்தான் இருக்கின்றது.

**நன்றியுரை**

திரு.பிரபு, உதவிப் பொறியாளர், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியம். கோவை தெற்கு அவர்கள் திருமதி. கே.சங்கீதா ரஃப் ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரி பொது மக்கள் கருத்து கேட்புக்கூட்டதை தலைமை ஏற்று நடத்திக் கொடுத்த தனி மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களுக்கும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களுக்கும் கலந்து கொண்ட பொதுமக்களுக்கும் என்னுடைய நன்றியை மாசுக்கட்டுபாடு வாரியம் மூலமாக தெரிவித்துக்கொள்கிறேன்.

மேற்கூறிய பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல் கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த காணொளி குறுந்தகடு, காணொளி, ஒலி மற்றும் புகைப்படங்கள் அடங்கிய பதிவுகோல், ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

மனுக்களின் எண்ணிக்கை – 1

18/3/24

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்**
**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்**
**கோயம்புத்தூர் தெற்கு**

**தனி மாவட்ட வருவாய் அலுவலர்**
**(நில எடுப்பு மற்றும் மேலாண்மை அலகு)**
**கோயம்புத்தூர் மாவட்டம்.**